# Chapter – 4

# தாவரங்கள் வாழும்

---

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு:**

**Question 1.**
குளம் வாழிடத்திற்கு உதாரணம்
அ) கடல்
ஆ) நன்னீர் வாழிடம்
இ) பாலைவனம்
ஈ) மலைகள்

**விடை:**
ஆ) நன்னீர் வாழிடம்

**Question 2.**
இலைத் துளையின் முக்கிய வேலை _____
அ) நீரைக் கடத்துதல்
ஆ) நீராவிப்போக்கு
இ ஒளிச் சேர்க்கை
ஈ) உறிஞ்சுதல்.

**விடை:**
இ) ஒளிச் சேர்க்கை

**Question 3.**
நீரை உறிஞ்சும் பகுதி ____ ஆகும்
அ) வேர்
ஆ) தண்டு
இ) இலை
ஈ) பூ

**விடை:**
அ) வேர்

**Question 4.**
நீர் வாழ் தாவரங்களின் வாழிடம்
அ) நீர்
ஆ) நிலம்
இ) பாலைவனம்
ஈ) மலை

**விடை:**
அ) நீர்

## II. சரியா, தவறா – தவறு எனில் சரியான விடையை எழுதுக

**Question 1.**
தாவரங்கள் நீர் இன்றி வாழ முடியும்

**விடை:**
தவறு
பல்வேறு வளர்சிதை மாற்றங்களைச் செய்வதற்கு தாவரங்களுக்கு தண்ணீர் தேவைப்படுகிறது.

**Question 2.**
தாவரங்கள் அனைத்திலும் பச்சையம் காணப்படும்.

**விடை:**
தவறு
பசுமையான பாகங்களில் மட்டும் பச்சையம் காணப்படுகிறது.

**Question 3.**
தாவரங்களின் மூன்று பாகங்கள் – வேர், தண்டு, இலைகள்.

**விடை:**
சரி

**Question 4.**
மலைகள் நன்னீர் வாழிடத்திற்கு ஓர் உதாரணம்

**விடை:**
தவறு
மலைகள் நில வாழிடத்திற்கு உதாரணமாகும்.

**Question 5.**
வேர் முட்களாக மாற்றுரு அடைந்துள்ளது.

**விடை:**
தவறு
முட்கள் பொதுவாக இலையின் மாறுபாடு ஆகும்.

**Question 6.**
பசுந் தாவரங்களுக்கு சூரிய ஒளி தேவை.

**விடை:**
சரி

**III. கோடிட்ட இடத்தை நிரப்புக**

**Question 1.**
புவி பரப்பில் நீரின் அளவு .........

**விடை:**
1.70

**Question 2.**
பூமியில் மிகவும் வறண்ட பகுதி ........

**விடை:**
பாலைவனங்கள்

**Question 3.**
ஊன்றுதல், உறிஞ்சுதல் இரண்டும் ........ வேலை

**விடை:**
வேரின்

**Question 4.**
ஒளிச் சேர்க்கை நடைபெறும் முதன்மை பகுதி .........

**விடை:**
இலைகள்

**Question 5.**
ஆணிவேர்த் தொகுப்பு …… தாவரங்களில் காணப்படுகிறது.

**விடை:**
இருவித்திலைத்

### IV. பொருத்துக

| | | | | விடைகள் |
|---|---|---|---|---|
| 1. | மலைகள் | அ. | ஒரு வித்திலைத் தாவரங்கள் | ஈ. இமய மலை |
| 2. | பாலைவனம் | ஆ. | கிளைகள் | இ. வறண்ட இடங்கள் |
| 3. | தண்டு | இ. | வறண்ட இடங்கள் | ஆ. கிளைகள் |
| 4. | ஒளிச்சேர்க்கை | ஈ. | இமய மலை | உ. இலைகள் |
| 5. | சல்லிவேர்த் தொகுப்பு | உ. | இலைகள் | அ. ஒரு வித்திலைத் தாவரங்கள் |

### V. தாவரங்களின் பாகங்கள் மற்றும் பணிகளில் மேலிருந்து கீழாக வரிசைப்படுத்துக.

**Question 1.**
இலைகள் – தண்டு – வேர் – மலர்கள்

**விடை:**
வேர் – தண்டு – இலைகள் – மலர்கள்


**Question 2.**
நீராவிப்போக்கு – கடத்துதல் – உறிஞ்சுதல் – ஊன்றுதல்

**விடை:**
ஊன்றுதல் – உறிஞ்சுதல் – கடத்துதல் – நீராவிப்போக்கு

### VI. மிகக் குறுகிய வினா.

**Question 1.**
வாழிடத்தை அடிப்படையாகக் கொண்டு தாவரங்களை வகைப்படுத்துக.

**விடை:**
நில வாழிடம் – நீர் வாழிடம் என வகைப்படும்.




**Question 2.**
பாலைவனத் தாவரங்களை அடையாளம் காண்க.

**விடை:**
சப்பாத்திக்கள்ளி, ஹைடிரில்லா, மா, ரோஜா.
சப்பாத்திக்கள்ளி தாவரங்கள் பாலைவனத்தில் காணப்படுகின்றன.
அவை தண்டுகளில் நீரைச் சேமிக்கின்றன.

**Question 3.**
வாழிடம் என்பதை வரையறு.

**விடை:**
ஒவ்வொரு உயிரினமும், உயிர்வாழவும், இனப்பெருக்கம் செய்யவும், தேவைப்படும் இடமானது அதன் வாழிடம் ஆகும்.
(உ.ம்) நன்னீர் வாழிடம் – ஆறுகள், குளங்கள், குட்டைகள்.

**Question 4.**
இலைக்கும், ஒளிச்சேர்க்கைக்கும் இடையே உள்ள தொடர்பு என்ன?

**விடை:**
இலைகள் பசுமையாக உள்ளன. அவற்றில் பசுங்கணிகங்கள் காணப்படுகிறது. இவை ஒளிச்சேர்க்கையில் ஈடுபடுகின்றன.

**VII. குறுகிய வினா.**

**Question 1.**
மல்லிகைக் கொடி ஏன் பின்னுகொடி என அழைக்கப்படுகிறது?

**விடை:**
நலிந்த, மெலிந்த தண்டுடைய தாவரங்கள் தாமாக நிலைநிற்க இயலாது. எனவே அவை ஆதாரத்தைச் சுற்றிக்கொண்டு ஏறுகின்றன. உம்) பட்டாணி.

**Question 2.**
ஆணிவேர் மற்றும் சல்லிவேர் தொகுப்புகளை ஒப்பீடு செய்க.

**விடை:**

| ஆணிவேர் | சல்லிவேர் |
|---|---|
| முளைவேர் தடித்த முளைவேராக வளர்கிறது இதிலிருந்து துணை வேர்களான, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை வேர்கள் தோன்றுகின்றன. | தாவரத்தின் கணுவிலிருந்து, ஏராளமான மெல்லிய சம பருமனுள்ள வேர்கள் கொத்தாகத் தோன்றி வளர்கின்றன. |
| எ.கா. இருவித்திலைத் தாவரம் அவரை,மா | எ.கா. ஒருவித்திலைத் தாவரம் நெல், புல் |

**Question 3.**
நிலவாழிடம் மற்றும் நீர் வாழிடத்தை வேறுபடுத்துக.

**விடை:**

| நிலவாழிடம் | நீர்வாழிடம் |
|---|---|
| நிலப்பரப்பில் உள்ளது<br>இயற்கையாக காணப்படுவது / மனிதனால் உருவாக்கப்பட்டது<br>1. பாலைவனம் 2. புல்வெளி<br>3. காடுகள்<br>(எ.கா) வெப்ப வறட்சிப்பாலைவனங்கள் | நிரந்தரமாக அல்லது நீர் சூழ்ந்து காணப்படும் பகுதி<br>நன்னீர் வாழிடம் / கடல் நீர் வாழிடம்<br>(எ.கா) ஆறுகள், ஏரிகள் |

**Question 4.**
உங்களுடைய பள்ளித் தோட்டத்தில் உள்ள தாவரங்களை பட்டியலிடுக.

**விடை:**
செம்பருத்தி, பெரணிகள், குரோட்டன்கள், ரோஜா, லில்லி, சப்பாத்திக் கள்ளி (கள்ளி வகைகள்), தென்னை மரங்கள், ராயல்பனை, கிளிட்டோரியா, சைகஸ், தங்க அரளி, ஹெலிகோனியா, தக்காளி, கத்தரி, வெண்டை, முதலானவை மாடித் தோட்டத்தில் உள்ளன.

## VIII. விரிவான வினா.

**Question 1.**
வேர் மற்றும் தண்டு ஆகியவற்றின் பணிகளைத் தருக.


**விடை:**

1. ஊன்றுதல் – தாவரத்தை பூமியில் நிலை நிறுத்துகிறது.
2. உறிஞ்சுதல் – மண்ணிலுள்ள நீரையும், கனிமச் சத்துக்களையும் உறிஞ்சி பிற பாகங்களுக்குக் கடத்துகிறது.
3. சேமிப்பு – சில தாவரங்கள் வேர்களில் உணவைச் சேமிக்கிறது. (எ.கா) கேரட்.


**தண்டின் பணிகள்**

- தாங்குதல் – கிளைகளையும், இலைகளையும், மலர்களையும், கனிகளையும் தாங்குகிறது.
- கடத்தல் – நீரையும் தாது உப்புகளையும் வேர்களிலிருந்து மற்ற பகுதிகளுக்கு மேல் நோக்கிக் கடத்துகிறது.
- இலைகள் தயாரித்த உணவை மற்ற பகுதிகளுக்குக் கடத்துகிறது.
- சேமித்தல் – கரும்பு போன்ற சில வகை தண்டுகள் உணவைச் சேமிக்கின்றன.

**Question 2.**
கொடுக்கப்பட்டுள்ள கருத்துப் படத்தில் அதன் தொடர்ச்சி கருத்துகளை விடுபட்ட இடங்களில் பூர்த்தி செய்க.




**விடை:**




## I. சரியான விடையைத் தோர்ந்தெடுத்து எழுதுக

**Question 1.**
மக்காச் சோளத்தில் காணப்படுவது,
அ) ஆணிவேர்
ஆ) சல்லிவேர்
இ) வேற்றிடவேர்
ஈ) கொத்துவேர்கள்

**விடை:**
ஆ) சல்லிவேர்

**Question 2.**
தண்டில் இலை உருவாகும் பகுதி,
அ) கணு
ஆ) கணுவிடை
இ) நுனிமொட்டு
ஈ) பக்கமொட்டு

**விடை:**
அ) கணு

**Question 3.**
இலையின் காம்பு
அ) மஞ்சரிக்காம்பு

ஆ) கூட்டிலைக்காம்பு
இ) பூக்காம்பு,
ஈ) இலைக்காம்பு

**விடை:**
ஈ) இலைக்காம்பு

**Question 4.**
இலை பச்சையாகக் காணப்படுவதற்கான காரணம்
அ) குளோரன்கைமா
ஆ) பச்சையம்
இ) இலைத்தாள்
ஈ) இலைத்துளை

**விடை:**
ஆ) பச்சையம்

**Question 5.**
விக்டோரியா அமேஸானிக்கா இலையின் விட்டம் அல்லது குறுக்களவு
அ) 2 மீட்டர்
ஆ) 2.5 மீட்டர்
இ) 3 மீட்டர்
ஈ) 1 மீட்டர்

**விடை:**
இ) 3 மீட்டர்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக**

**Question 1.**
தாங்கள் வாழிடங்களுக்கேற்ப தாவரங்கள் சில சிறப்புப்பண்புகளைப் பெற்றுக் காணப்படுகின்றன இதற்கு ...... என்று பெயர்

**விடை:**
தகவமைப்புகள்

**Question 2.**
இந்திய துணைக் கண்டத்தில் காணப்படும், மிகப் பெரிய மணல் குன்றுகளாலான பாலைவன ........ எனப்படும்.

**விடை:**
தார் பாலைவனம்

**Question 3.**
இலையின் மையத்தில் காணப்படும் நரம்புக்கு....... என்று பெயர்.

**விடை:**
நடு நரம்பு

**Question 4.**
ஒரு உயிரினத்தில் அதன் சூழலுக்கேற்ப காணப்படும் மாற்றத்திற்கு .......... என்று பெயர்.

**விடை:**
மாறுபாடு

**Question 5.**
காகிதப்பூ ......என்று அழைக்கப்படுகிறது

**விடை:**
போகன் வில்லா

## III. சரியாக வரிசைப்படுத்துக

**Question 1.**
கடல், ஏரி, ஆறு, குளம்

**விடை:**
குளம், ஏரி, ஆறு, கடல்

**Question 2.**
கணுவிடை-கணு- கோணமொட்டு-நுனிமொட்டு

**விடை:**
நுனிமொட்டு – கோணமொட்டு-கணு- கணுவிடை

**IV. மிகக் குறுகிய வினா**

**Question 1.**
இலையின் புற அமைப்பைப் படம் வரைக – பாகங்களைக் குறிக்க

**விடை:**




**Question 2.**
பூக்களின் அடிப்படையில் தாவரங்களை வகைப்படுத்து

**விடை:**
பூக்களின் அடிப்படையில் தாவரங்கள் இருவகையாகப் பிரிக்கலாம்

- பூக்கும் தாவரங்கள் எ.கா. ரிக்ஸியா
- பூவாத தாவரங்கள் எ.கா. மா ம்

**Question 3.**
ஜிம்னோஸ்பெர்ம் மற்றும் ஆஞ்சியோஸ்பெர்ம் தாவரங்களை வேறுபடுத்து

**விடை:**

- ஜிம்னோஸ்பெர்ம்கள் – பூவாத தாவரங்கள் ஆனால் விதைகளை உருவாக்கும் (எ.கா) பைனஸ், சைகஸ்
- ஆஞ்சியோஸ்பெர்ம்கள் : பூக்கும் தாவரங்கள் விதைகளை உருவாக்கும். (எ.கா) மா- ரோஜா

**Question 4.**
காக்டஸ்- தாவரம்-குறிப்பு வரைக

**விடை:**

- இது ஒரு பாலைவன வாழ் தாவரம் (இங்கு மழை அளவு குறைவு (அ) காணப்படாது)
- ‘தண்டு – நீரை சேமிக்கும்.
- இலைகள் – முட்களாக மாறுபாடடைந்து காணப்படும்.
- வேர்கள் – நன்கு வளர்ச்சியடைந்து மண்ணின் மிக ஆழத்திற்குச் சென்று நீரை உறிஞ்சுகின்றன.

**Question 5.**
முட்கள் என்றால் என்ன?

**விடை:**
சில தாவரங்களில் இலைகள் அல்லது பாகங்கள் முட்களாக மாறுபாடடைந்துள்ளன. இவை நீராவிப் போக்கினால் ஏற்படும் நீரிழப்பைக் குறைக்கின்றன.
(எ.கா) அகேவ் (இலை நுனி மற்றும் விளிம்பு முட்களாக மாறுபாடடைந்துள்ளது)

## V. விரிவான விடையளி

**Question 1.**
பற்றுக்கம்பிக் கொடி-விவரி

**விடை:**

- பற்றுக்கம்பி என்பது சில மெலிந்த தண்டுடைய தாவரங்களில், காணப்படுகிறது.
- இது ஆதாரத்தைச் சுற்றிக் கொண்டு அத்தாவரங்கள் மேலே ஏறுவதற்கு ஏதுவாக உள்ளது.
    1. இனிப்புப்பட்டாணி – இதில் சிற்றிலைகள் பற்றுக் கம்பிகளாக மாறியுள்ளன.
    2. பாகற்காய் – இதில் கோணமொட்டு பற்றுக்கம்பிகளாக மாற்றம் அடைந்து மேலே ஏறுவதற்கு உதவுகின்றன.

**Question 2.**
பாலைவன வாழிடம் குறித்தெழுது

**விடை:**

- பூமியின் மிக வறண்ட பகுதி.

- மழை அளவு சராசரி 25 செ.மீக்கும் குறைவாக உள்ளது.
- பூமியில் சுமார் 20% பாலைவனமாக உள்ளது.
- தாவரங்கள் – கடுமையான வறட்சியைத் தாங்கும் தகவமைப்புடையவை.
- தடிமனான இலைகள் நீரையும் கனிம உப்புக்களையும் சேமித்து வைக்கின்றன.
- தண்டுகள் – நீரை சேமிக்கின்றன. எ.கா. காக்டஸ் (கள்ளி வகைகள்)
- இலைகள் – முட்களாக மாறுபாடடைந்துள்ளன. எ.கா. ஒபன்ஷியா.

**மனவரைபடம்**

